
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



**காலாண்டு இதழ்**
**(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)**
**ஆகிய மாதங்களில் வெளிவரும்**

Vol:8 Issue :30 April 2026

கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher
**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members
**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in



நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# கலித்தொகையில் மரபு மாற்றமும் தொல்காப்பியர் சுட்டாத அகப்பொருள் மரபுகளும்

# *Deviation in Tradition in the Kalithogai and Conventions of Agapporul (Inner-Life Poetry) Not Cited by Tolkappiyar.*

***Dr R. Chitravelu**, Assistant Professor, Department of Tamil, Maruthu Pandiyar College, Thanjavur - 613 403.*

**முனைவர் இரா.சித்திரவேலு**, உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத் துறை, மருதுபாண்டியர் கல்லூரி, தஞ்சாவூர் - *613 403.*

***Abstract***

*Tradition (Marabu) is intrinsically linked to every facet of culture. It may be defined as a practice followed by many, or as a norm accepted by the collective. Tolkappiyar himself describes it as "the science of tradition (Marabiyal)—a realm of excellence that is immutable" (Tol. Mar. Sutra 1). Throughout his treatise, his reverence for ancestral traditions is evident in his frequent use of phrases such as enba (they say), mozhiba(they state), kooruba (they articulate), and enmanar (scholars opine). In his work, Tolkappiyar has meticulously documented numerous traditions—pertaining to Ezhuthu(orthography), Sol (morphology|syntax), and Porul (semantics|subject matter)—that prevailed both during his own era and in the periods preceding it. These traditional conventions feature prominently in the Sangam literature that emerged subsequent to Tolkappiyar's era—most notably within the Kalithogai. As the Kalithogai stands as a literary work of a later period, one observes within it certain deviations in traditional usage regarding the nomenclature employed to designate animals, birds, and human beings. Furthermore, this literary work also contains traditional conventions that were not explicitly cited by Tolkappiyar. The objective of this paper is to analyse these specific aspects.*

***Key Words:** Tradition, Tolkappiyar, Kalithogai, Agapporul,Thematic Shifts, Names of Youth.*

**ஆய்வுச்சுருக்கம்**

மரபு என்பது பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் தொடர்புடையது. பலரால் பின்பற்றப்பட்டு வருவது அல்லது பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதி என்றும் கூறலாம், மாற்றருஞ் சிறப்பின் மரபியல் (தொ.மர.நூ.1) என்பார் தொல்காப்பியர். தம் நூலில் என்ப, மொழிப, கூறுப, என்மனார் எனப் பலவிடங்களில் கூறியிருப்பதிலிருந்து முன்னோர் மரபைப் போற்றியுள்ள பாங்கை உணரலாம். எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றிலும் தம் காலத்திலும் தமக்கு முற்பட்ட காலத்திலும் நிலவிய மரபுகள் பலவற்றைத் தொல்காப்பியர் தமது நூலில் பதிவு செய்துள்ளார். அம்மரபுச் செய்திகள் தொல்காப்பியத்திற்குப் பின்தோன்றிய சங்க இலக்கியங்களிலும் அதிலும் கலித்தொகையில் பெரும்பான்மை இடம்பெற்றுள்ளன. காலத்தால்

பின் தோன்றிய இலக்கியமாக கலித்தொகை விளங்குவதால், இவ்விலக்கியத்தில் விலங்கு, பறவை, மக்கள் ஆகியவ்றறை குறிக்க வரும் பெயர்களில் மரபு மாற்றம் காணப்படுகிறது. மேலும், தொல்காப்பியர் சுட்டாத மரபுகளும் இவ்விலக்கியத்தில் காணப்படுகின்றன. இவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** மரபு, தொல்காப்பியர், கலித்தொகை, அகப்பொருள், கருப்பொருள் மாற்றங்கள், இளைஞர்களின் பெயர்கள்.

**முன்னுரை**

பாட்டும் தொகையும் என அறியப்படும் சங்க இலக்கியங்களின் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று கலித்தொகை. பா வகையினால் பெயர் பெற்ற கலித்தொகை கற்றறிந்தார் ஏத்தும் கலி என்றும், கல்வி வலார் கண்ட கலி என்றும் சிறப்பித்துக் கூறப்படுவது. சங்க இலக்கியங்களில் தொகுக்கப்பட்ட நூல்களில் நூற்றைம்பது பாடல்களும் சிதைவின்றிக் கிடைப்பது இதன் தனிச்சிறப்பாகும். மேலும் நச்சினார்க்கினியார் எழுதிய உரையும் கலித்தொகைக்கு கிடைத்துள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்கள் கி.பி.1887 ஆம் ஆண்டில் கலித்தொகையை முதன்முதலில் ஏட்டுச் சுவடிகளை ஆய்ந்து நூலாகப் பதிப்பித்தார்.

**மரபு**

மரபு என்பது “இலக்கியங்கள் மரபு வழிப்பட்ட சொற்களால் அமைய வேண்டும். மரபு நெறியிலிருந்து சிறிதளவும் திரிதல் கூடாது”[1] எனத் தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. மேலும், “மரபு நிலை திரியுமானால் உலகத்துப் பொருளெல்லாம் திரிந்து வெவ்வேறாகும்”[2] என்பதையும் தொல்காப்பியர் உணர்த்துகிறார். தொல்காப்பியர் காலத்திலேயே அல்லது அவர் காலத்திற்கு முன்பாகவே மரபில் ஓரளவு நெகிழ்ச்சித் தன்மை ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை மரபியல் 69 ஆம் நூற்பா குறிப்பிடுகின்றது. முடிய வந்த வழக்காயினும் கடிதல் கூடாது என்பதே அந்நூற்பா உணர்த்தும் பொருளாகும். மரபில் நிலைத்த தன்மை வேண்டும் என வரையறுக்கப்பட்டிருப்பினும் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்படுவதுண்டு என்பதற்குத் தொல்காப்பியத்தில் கூறப்படும் பல மரபுச் சொற்கள் சங்கத் தொகை நூல்களிலேயே வழக்கிழமைந்தமையைக் காட்டலாம்.

ஆ. சிவலிங்கனாரும், “மரபு என முடியும் இயல்களில் கூறப்பட்ட செய்திகள் காலப் போக்கில் மாறுபடுவதற்கு மாற்றப்படுவதற்கு உரியன அல்ல எனக் கொள்ளலாம். இயல் என முடிவன மாறவோ, மாற்றப்படுவோ உள்ளன”[3] என்பர். இவரது இக்கூற்று தொல்காப்பியர் கால மரபுகள் மாறுவதற்குரியன என்பதையே வலியுறுத்துகிறது.

**மரபு மாற்றத்திற்கான காரணங்கள்**

மரபு என்பது உடனே மாறக்கூடியது அன்று; நெடுநாள் நிலைத்து நிற்பது எனலாம். மரபிலிருந்து மாற்றம் ஏற்படுமானால் அது மெல்லவே நிகழும். அதுவும் மரபை ஒட்டியே நிகழும். இந்த மரபு மாற்றத்திற்கான காரணங்களாகக் காலவளர்ச்சி, பாடுபொருள், ஒற்றுமை, சமுதாய மாற்றம், புதுமை, வேட்கை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்,

**கலித்தொகையில் மரபு மாற்றம்**

கலித்தொகை பாட்டாலும், பாடுபொருளாலும் சிறந்திருத்தலோடு தொல்காப்பியந் தொட்டுத் தமிழகத்தில் பதிவாகியிருக்கும் பல வரலாற்றுச் செய்திகளையும் மரபுகளையும் பதிவு செய்வதில் தனித்துவம் பெற்றிருந்தது. தமிழ் அகப்பொருள் மரபுகளைப் பெரும்பான்மையும் தழுவிய இக்கலித்தொகையில் ஆங்காங்கே அம்மரபுகளை மாற்றிப் புதிய முறையில். புதிய வடிவில். புதிய செய்திகள் காணப்படுகின்றன.

கலித்தொகையில் இத்தகு நிலைமைக்கும், மாற்றத்திற்கும் முதல் காரணமாய் அமைந்திருப்பது கால வளர்ச்சியாகும். மரபு மாற்றத்திற்கான காரணங்களுள் முதலாவதாக இடம் பெறுவது கால வளர்ச்சியே ஆகும். இவ்வடிப்படையில் சங்கத் தொகை நூல்களுள் காலத்தால் பிந்தியதான இக்கலித்தொகைப் பண்டையத் தமிழ் மரபுகளைப் பெரும்பான்மையாக ஏற்றாலும், தான் தோன்றிய, வளர்ந்த, வாழ்ந்த காலத்திய மாற்றங்களைப் பதிவு செய்துள்ளது. இதுவே ஓர் இலக்கியத்தின் முதற்பணியாகும். ஏனெனில் இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பது இலக்கியத்திற்குள்ள வரைமுறையாகும்.

தமிழ் அகப்பொருள் மரபிலிருந்து மாற்றம் பெற்றுள்ள இத்தொகைப் பாடல்களின் தனித்தன்மைகளுக்கு வலு சேர்ப்பதே இம்மரபு மாற்றங்களாய் அமைந்த செய்திகளேயாகும். ஏனெனில், பிற தொகை நூல்களுள் பெரும்பான்மையாய் ஒரே ஒழுகலாறில் செல்கின்றன. ஆனால் கலித்தொகை மட்டுமே முன்னைய மரபிலிருந்து சிலவற்றில் மாற்றம் பெற்றுள்ளது. அவற்றுள் கருப்பொருளாகிய விலங்கு, பறவை, மக்கள் ஆகியவற்றைக் குறிக்கும் இளமைப் பெயர், ஆண்பால் பெயர், பெண்பால் பெயர், இவற்றிற்குரிய பெயர்கள் மரபு மாற்றமும் தொல்காப்பியர் சுட்டாத அகப்பொருள் மரபுகள் அதிகம் காணப்படுகின்றன.

**கருப்பொருள் மாற்றங்கள்**

முதற்பொழுதாகிய நிலத்திலும், பொழுதிலும் கருக்கொள்கின்ற பொருட்கள் கருப் பொருள்கள் ஆகும். கருப்பொருள்கள் குறித்து க.ப.அறவாணன் "கருப்பொருளே உரிப் பொருளுக்கு அடிக்கல். உரிப்பொருள் கருப்பொருள் மேல் கட்டப்பட்ட கட்டடம்"[4] என்று கூறுகின்றார். முதற்பொருளினின்றும் கிளைப்பதாலும், உரிப்பொருளுக்குத் துணையாக நிற்பதாலும் அவ்விரண்டிற்கும் இடையே கருப்பொருள்களை வைக்க வேண்டும் என்று எண்ணிய தொல்காப்பியர் கருப்பொருள்களாகத் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, தொழில், யாழ் ஆகிய எட்டினைக் குறிப்பிடுகின்றார்.

கருப்பொருள்களுள் விலங்கு, பறவை, மக்கள் ஆகியவை பாடலுட் பயின்று வருகையில் நில மரபுகளை ஏற்று வரும் அம்மரபுகளை எல்லாம் தொல்காப்பியர் மரபியலில் விளக்குகின்றார். இக்கருப்பொருள் மரபுகளில் விலங்கு, பறவை, மக்கள் ஆகிய மூன்றும் ஆண்பாற்பெயர், பெண்பாற் பெயர், இளமைப் பெயர் ஆகியவை கலித்தொகையில் எவ்வாறு கையாளப்பட்டிருக்கிறது என்பதுடன் புதிதாகத் தோன்றியுள்ள பெயர்களைப் பற்றியும் ஆராயலாம்.

**ஆண்பாற் பெயர்**

விலங்கு பறவையினம் ஆண்பாற் பெயர்களாகத் தொல்காப்பியர்,

**எருதும் ஏற்றுறையும் ஒருத்தலும் களிறும்**

**சேவும் சேவலும் இரலையும் கலையும்**

**மோத்தையுந் தகரும் உதளும் எப்பரும்**

**போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்**

**யாத்த ஆண்பாற் பெயரென மொழிப![5]**

ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். இவற்றுள் எவையெவை எவ்வெவ் ஆண்பாற் பெயர்களைப் பெறும் என்பதைத் தொடர்ந்து வரும் பதினாறு நூற்பாக்களில் தெளிவுபடுத்துகின்றார்.

தொல்காப்பியர், இவ்வாண்பாற்பெயர்கள், 15இல் கலித்தொகையில், களிறு, ஒருத்தல், க லை, இரலை, ஏறு, கழுவன், சேவல் ஆகியவை எவ்வெவ் இனத்திற்கு எவையெவை வரவேண்டு மோ அவை மரபு பிறழாமல் உள்ளது உள்ளபடியே வருகிறது. ஆனால் தொல்காப்பியர் சுட்டிக் கூறாத அலவன். வாரணம். வேகம் என்னும் பெயர்கள் கலித்தொகையில் இடம்பெற்றுள்ளன.

**விலங்கு ஆண்பாற்பெயர் மரபு மாற்றம்**

**அலவன் (நண்டு)**

தொல்காப்பியர் குறிப்பிடாத நண்டுக்குரிய ஆண்பாற்பெயராக 'அலவன்' என்று கலித் தொகையில் காணப்படுகின்றன. எ.கா.

**கைதை, அலவன் கண்பெற அடங்காச் சுற்றிய**

**பலவுறு கண்ணுள் சிலதோல் அவிர்தொடி (ம.கலி.20:6-7)**

உன் கையில் நண்டின் கண்ணைப் போல் பொன்னால் சிறு அரும்புகள் செய்து என்று நண்டுக்கு அலவன் என்ற பெயர் காணப்படுகின்றன.

**ஆனாப் பரிய அலவன் அனைபு கூஉம் (நெ.கலி.14:18)**

**உவறுநீர் உயர்எக்கள் அலவன்ஆடு அளைவரித் (நெ.கலி.19:2)**

மேற்காணும் பாடல்களில் 'அலவன்' என்று நண்டிற்குரிய ஆண்பாற் பெயராக கலித்தொகையில் காணப்படுகின்றன.

**வாரணம் (ஆண் யானை)**

**மறம்கொள் இரும்புலித் தொல்முரண் தொலைத்த**

**முறம்செவி வாரணம் முன்குளகு அருந்திக் (கு.கலி.6:1-2)**

முறம் போன்ற காதை உடைய யானை என்று பொருள் காணப்படுகின்றன. தொல்காப்பியர் யானைக்கு, வாரணம் என்ற பெயரை சுட்டிக் கூறவில்லை. கலித்தொகையில் மட்டும் இச்சொல் காணப்படுகுன்றது.

**வேழம், கடா (ஆண் யானை)**

**உறல்உறு கடாஅத்து ஒல்கிய எழில்வேழம் (பா.கலி.7:4)**

**களிதிகழ் கடாஅத்து கடுங்களிறு அகத்தவா (பா.கலி.24:5)**

**கடாஅக் களிற்றினும் கண்ணஞ்சா ஏற்றை (மு.கலி.1:36)**

மேற்கண்ட அடிகளில் ஆண் யானைக்கு வாரணம், வேழம், கடா என்று தொல்காப்பியர் குறிப்பிடாத பெயர்கள் கலித்தொகையில் மட்டுமே யானைக்கு இப்பெயர் சுட்டப்படுகிறது.

**விடை (ஆண் பசு)**

**பல்ஆன் பொதுவர் கதழ்விடை கோட் காண்மார் (மு.கலி.3:5)**

கதழ்விடை என்றால் விரைந்து நடக்கும் காளை என்ற பொருள்படும்படி ஆண் பசுக்கு தொல்காப்பியரால் சுட்டாத மரபு மாற்ற பெயர்கள் காணப்படுகின்றன.

**மக்கள் (ஆண்பால் பெயர்கள்)**

**தலைவன் (நெடுந்தகை)**

தொல்காப்பியர் குறிப்பிடாத மனிதர்களுக்குரிய ஆண்பால் பெயர்கள் கலித்தொகையில் காணப்படுகின்றன.

**புனைஇழாங் நின்னிலை யான்கூறப் பைஎன**

**நிலவுவேல நெடுந்தகை நீளிடைச்**

**செலவு தன்னால் செறிக நின் வளையே (பா.கலி.9:21-23)**

என்று உன்னுடைய நிலையை எடுத்துக் கூறினேன். மெல்லெனச் சிந்தித்துப் பிரிந்து போகும் எண்ணத்தைக் கைவிட்டார். இவற்றில் நெடுந்தகை என ஆண்பால் பெயராக வந்துள்ளது. இது போன்று பாலைக்கலி 8, 16, 24 ஆகிய பாடல்களிலும் முல்லைக்கலி 10, 11, 17 பாடல்களிலும் காணப்படுகின்றது.

**பெருமான் (ஆண்பால் பெயர்)**

**மருப்புப் பூண் கையுரை யாக அணிந்து**

**பெருமான்! நகைமுகம் காட்டு என்பாள் கண்ணீர் (ம.கலி.17:12-13)**

**அரிமதிர் உன்கண் பசப்பநோய் செய்யும்**

**பெருமான் பரத்தைமை ஒவ்வாதீ! என்றார் (ம.கலி.17:22-23)**

அவள் காளை உருவம் பொறித்த சிறுமாலையை அன்பளிப்பாக இவனுக்கு அணிவித்து, பெருமானே, சற்றே சிரி என்றாள்.

நெடுந்தகை, பெருமான் என்ற சொற்கள் ஆண்பாலை குறிக்க இப்பாடலில் பயின்று வந்துள்ளது.

மேற்கண்ட பாடல்களில் ஆண்பால் பெயர்களாக வரும், அலவன் (நண்டு), வாரணம், வேழம், கடா (ஆண் யானை), விடை (ஆண் பசு) தொல்காப்பியர் குறிப்பிடாதப் பெயர்களாக காணப்படுகின்றன. இவை மரபு மாற்றமாகக் காணலாம்.

**பெண்பாற் பெயர்கள்**

பெண்பாற் பெயர்களில் மரபு மாற்றம் காணப்படுகிறது. தொல்காப்பியர் பேடை, பெட்டை, பெடை, பெண், மூடு, நாடு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி என்னும் பதின்மூன்றும் பெண்பாற் பெயர்களாகும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

தொல்காப்பியர் சுட்டாத பெண்பாற் பெயர்களாக கலித்தொகையில் காணப்படுகின்றன.

**பறவை தம் பார்ப்பு உள்ளக் கறவைதம் பதிவயின்**

**கன்று அமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர (நெ.கலி.2:9-10)**

பறவைகள் தமது குஞ்சுகளை நினைந்து கூட்டுக்குத் திரும்பின; பசுக்கள் தம் கன்றுகளைப் பார்க்கும் ஆசையோடு மன்றில் புகுந்து என்று கறவை — என்பது பசுவைக் குறிக்கும் சொல்லாக வந்துள்ளது.

மக்களுக்குரிய பெண்பாலை உணர்த்தும் வகையில் கலித்தொகையில் மடவரல், மடந்தை, மாதர், மகளிர், பேதை, தையல் போன்ற பல பெண்பாற் பெயர்கள் கலித்தொகை முழுவதும் விரவிக் கிடக்கின்றன. மேலும் ஆளந் என்னும் ஆண்பாற் பெயருக்கு எதிர்மறையான ஆட்டி என்னும் பெண்பாற் பெயர் இகலாட்டி, சொல்லாட்டி என இரு சொல் கலிப்பாடலில் வந்துள்ளது.

**நகை வல்லேன் யான் என்று என் உயிரோடு படைதொட்ட**

**இகலாட்டி நின்னை எவன் பிழைத்தேன்? எல்லா யான் (மு.கலி.8:6-7)**

புன்னகை செய்ய வல்லேன் என்பாய் போலச் சிறிதே நகை காட்டி, போர்க்களத்தில் வேந்தனின் சேனை பகைவரின் உயிரைப் பறிக்கும் அம்பினை எய்துவது போல என் உயிரைப் பறித்தனை, இதற்கு யான் செய்த தவறு யாது? என ஆண்பாலுக்கு எதிர்மறையான பெண்ணைக் குறிக்க இகலாட்டி என்று வந்துள்ளது.

**இளமைப் பெயர்கள்**

விலங்கினத்திலும், பறவையினத்திலும், மக்களினத்திலும் அமையும் இளமைப் பெயர்களால் பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி என்ற ஒன்பதையும் தொல்காப்பியம் மரபியலில் குறிப்பிடுகின்றார். தொடர்ந்து வரும் நூற்பாக்களில் எவையெவை எவ்வெவ் இளமைப் பெயர்களைப் பெறும் என்பதையும் விளக்குகிறார்.[6]

இவற்றுள் கலித்தொகையில் குழவி, பறழ் என்னும் இரண்டைத் தவிர ஏனையவை கலித்தொகைப் பாடல்களில் உரிய விதிப்படியே அமைந்துள்ளன. குழவி, பறழ் இவ்விரண்டின் மரபு மாற்றம் குறித்து இனிக் காணலாம்.

> **குழவி என்னும் இளமைப் பெயர் யானை, ஆ, எருமை, கடமை, மரை, குரங்கு, முசு, ஊகம் ஆகிய விலங்கினங்களின் இளமைப் பெயராகவும் மக்களினத்தின் இளமைப் பெயராகவும் நெல்லும் புல்லும் ஒழிந்த ஓரறிவுயிர்களின் இளமைப் பெயராகவும் வரும்[7]**

என்று கூறுகின்றார் தொல்காப்பியர்.

**குழவி**

கலித்தொகையில் குழவி என்னும் இளமைப் பெயர் இம்மரபுக்கு மாறாக திங்களைக் குறிக்க கூடிய பொருளில் வருகின்றது.

**வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையும்**

**கொலைவன் சூடிய குழவித் திங்கள்போல் . . .** *(மு.கலி.314-15)*

*அழகிய ஒளி பரந்த புள்ளிகள் வெள்ளையாயிருக்கின்ற சிவந்த ஏற்றையுங் கொலைத் தொழிலையுடைய இறைவன் சூடிய இளையதாகிய திங்களைப் போல (பிறை) உள்ளது என்று தொல்காப்பியர் குறிப்பிடாதப் பொருளில் காணப்படுகின்றன.*

**பறழ்**

**பறழ் எனும் இளமைப் பெயரைக் குறிக்கும் சொல் மூங்கா, வெருகு, எலி, அணில் ஆகியவற்றிற்கும், நாய், பன்றி, புலி, முயல், நரி ஆகியவற்றிற்கும் அமையும்[8]**

என்று தொல்காப்பியர் மரபியலில் உரைக்கின்றார். ஆனால் தொல்காப்பியர் குறிப்பிட்ட விலங்கினங்களின் இளமைப் பெயராகப் பறழ் எனும் சொல் கலித்தொகையில் குறிப்பிடப்படவில்லை. இம்மரபிற்கு, மாறாகப் பறப்பனவற்றின் இளமைப் பெயராக பறழ் எனும் சொல் மருதக்கலியில் பயின்று வந்துள்ளது. இதனை,

**ஆண்டலைக்கு ஈன்ற பறழ் மகனே . . .** *(ம.கலி.2:9)*

**குழவி, மகவு**

மக்கள் இளமைப் பெயர்களாகக் குழவி, மகவு ஆகிய இரு சொற்களை மட்டுமே தொல்காப்பியர் கூற, உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் மக்கள் இளமைப் பெயர்கள் பலவாறாக வழங்கப்படுகின்றன. இதனைத் தொல்காப்பியர் கோட்பாடுகளுக்கு முரண் எனக் கொள்ளாது, காலப்போக்கில் மரபில் ஏற்பட்ட மாறுதல் எனக் கொள்வதே பொருத்தமாக அமையும். மேலும் கலித்தொகையில் சிறிய பெண்ணைச் சிறுமி எனவும், சிறுவனைச் சிறுபட்டி எனவும், ஆண் குழந்தையை வடமொழி சார்ந்து புதல்வன் எனவும் அழைக்கப்படுவதையும் காணலாம் (கு.கலி.15, 29, ம.கலி.5, 10, 19, மு.கலி.14). ஆண் குழந்தையை, செம்மல், பெருமான், மேதக்க எந்தை பெயரன் என அழைக்கப்படுவதையும், கலித்தொகையில் காண நேரிடுகின்றது (ம.கலி.16, 18, 19, 20, 21) புதியனவற்றையும் ஏற்றுக் கொள்ளும் மரபினையே இது தெரிவிக்கின்றது.

இவையேயன்றிக் காயம் எனும் சொல் யானையின் இளமைப் பெயராகக் கலித்தொகையில் வந்துள்ளது. இதனை,

**உடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரை** *(பா.கலி.10)*

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம். ஆனல் கயம் என்றொரு இளமைப் பெயரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிடவில்லை என்பது நோக்கற்குரியதாகும்.

இவற்றால், இளமைப் பெயர்களைக் குறிக்கும் மாறி, பார்ப்பு, கன்று, மரபு எனும் சொற்கள் தொல்காப்பியரின் கோட்பாடுகளுக்கிணங்கவும், குழவி, பறழ் எனும் சொற்கள் அக் கோட்பாட்டிலிருந்து விலகி இருப்பதையும் கலித்தொகை மூலம் அறியப்படுகின்றது. மேலும் மரபு வளர்ச்சிகளின் காரணமாகத் தொல்காப்பியர் குறிப்பிடாத சில இளமைப் பெயர்களும் கலிப்பாடல்களில் இடம்பெற்றிருக்கின்றன என்பதையும் சில இளமைப் பெயர்கள் மாறுபட பெற்றிருக்கின்றன என்பதையும் சில இளமைப்பெயர்கள் மாறுபட வந்திருப்பினும் அவையும் மரபு வளர்ச்சியினையே தெரிவிக்கின்றன என்பதையும் அறியலாம்.

**தொல்காப்பியர் சுட்டாத அகப்பொருள் மரபுகள்**

**தொல்காப்பியர் அகத்திணைப் பாடல்களில் களவியலும் கற்பிலும் கூற்று நிகழ்த்துவதற்கு உரிமை படைத்த மாந்தர்கள் யாவர் என்பதைச் செய்யுளியலில் குறிப்பிடுகின்றார்.[9]**

பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி இவ்வறுவரும் களவிலும், இவ்வறுவருடன் பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவருமாகப் பன்னிருவரும் கற்பில் கூற்று நிகழ்த்துவதற்குரியர் என்றும் வரையறுத்துக் கூறுகின்றார். தெல்காப்பியர், மேற்கூறியவற்றுள் தொல்காப்பியர் கூற்றிற்குரியராகச் சுற்றத்தாரை எங்கும் சுட்டிக் கூறவில்லை. ஆனால், இம்மரபிலிருந்து மாறிக் கலித்தொகையின் ஒரு பாடலில் சுற்றத்தார் கூற்று நிகழ்த்துவதாகப் புதிய மரபு தோன்றியுள்ளது. அப்பாடலில் இஃது ஆயின் தலைவனாய் ஏறு தழுவினமை சுற்றத்தார் கண்டு நின்று கூறியது என்று துறை கூறுகின்றது.

**தன்னுமைப் பாணி தளரா எழூஉக**

**பண்ணமை யின்சீர்க் குரவையுள் தெண்கண்ணி**

**திண்தேடாள் திறலொளி மாயப்போர் மாமேனி**

**அந்துவ ராடைப் பொதுவனோ பாய்ந்த**

**முறுவலாள் மென்றோள் பாராட்டிச் சிறுகுடி**

**மன்றம் பரந்த துரை** **(மு.கலி.2:34-39)**

என்ற இப்பாடலில், சிறுகுடி மன்றத்தில் உள்ளோர் தலைவனை வாழ்த்தித் தலைவிக்கு மணம் முடித்து வைப்பதைப் பற்றிப் பேசுகின்றனர். இவற்றின் மூலம் சிறுகுடி மன்றத்தில் உள்ளோர் யாவரும் சுற்றத்தினராகவே இருத்தல் கூடும் என்ற உண்மை புலப்படுகிறது. இதுபோன்று மற்றொரு கலிப்பாடல் கூற்று வகையில் அமைந்துள்ளது. அகப்பாடல்கள் ஒருவர் கூற்று அமைப்புடையதாகவும் இருவர் மாறி மாறி உரையாடும் வகையினதாகவும் அமையுமேயன்றிப் பல்லோர் கூற்றாக அமைதல் இல்லை. இம்மரபுக்கு மாறாகக் கலித்தொகையில் 106 ஆவது பாடல் ஏறு கொண்டவாறு கண்டு ஆய்ச்சியர் தங்காதல் மிகுதியால் தங்காதலைக் கைபிணைந்து, குரவையாடித் தென்னன் வாழ்கெனக் கானம்பாடினர் என்றமைந்துள்ளது. இவற்றுள் வரும் ஆய்ச்சியர் என்பது ஒருவரைக் குறிப்பதன்று. அஃது பன்மையாகும்.

**அருந்தலை யேற்றோடு காதலர்ப்பேணி**

**சுரும்பிமிர் கானநாம் பாடினம் பரவுதும் (மு.கலி.6:47-48)**

**கையுறை**

தலைவன் களவுக் காலத்தில், தலைவியைச் சந்திக்க வருகின்ற வேளையில், விருப்பத்தின் காரமணாக மலரையோ, தழையையோ வேறு ஏதேனும் பொருளையோ தருவான். இது கையுறை எனப்படும். தொல்காப்பியத்தில் கையுறை பற்றியோ கையுறையை ஏற்பது, மறுப்பது பற்றியோ குறிப்பேதும் இல்லை. சங்க இலக்கியங்களில் இக்கையுறை பற்றிச் செய்திகள் ஆங்காங்கே ஒருசில இடங்களில் காணப்படுகுன்றன. அவற்றுள் கலித்தொகையும் ஒன்றாகும். கலித்தொகையின் முல்லைக் கலியில் ஆயமகன் கொடுத்த கண்ணியைச் சூடிவந்த ஆயமகள் பற்றிய செய்தி ஒன்று காணப்படுகிறது.

**புல்லினத் தாய மகன்சூடி வந்ததோர்**

**முல்லை யொருகாழுங்க கண்ணியும் மெல்லியால்**

**கூந்தலுள் பெய்து முடித்தேன்மன் தோழியாய்**

**வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போட**

**அன்னையும் அத்தனும் இல்லரா யாய்நாண**

**அன்னைமுன் வீழ்ந்தன்று**

**அதனை, வினைவலுஞ் செய்யாள் சினவலுஞ் செய்யாள்**

**நீங்கப் புறங்கடைப் யோயினாள் . . . (மு.கலி.15:4-12)**

இப்பாடலில் தான் கையுறையாகப் பெற்றுச் சூடிய பூ, தாயின் முன் விழ, தான் கையும் களவுமாக அகப்பட்டதைத் தலைவி தோழியிடம் எடுத்துக் கூறுகின்றாள்.

**கூடலிழைத்தல்**

தலைவன் தலைவியைக் காண வராமல் காலம் நீட்டிக்குங்கால் விரைவில் வருவாரா, மாட்டாரா என்பதை அறிந்துகொள்ளத் தலைவி ஏதேனும் முயற்சி செய்து பார்ப்பாள். அவற்றுள் ஒன்று கூடலிழைத்தல் ஆகும்.

கூடலிழைத்தல் என்பது தலைவி கண்களை மூடிக்கொண்டு தரையிலோ, மணலிலோ வட்டம் போடுவாள். இவ்வாறு வட்டம் போடுகின்ற பொழுது வட்டம் முழுமையாக இணைந்தால் தலைவன் வருவான். இணையவில்லை எனில் தலைவன் வரமாட்டான் எனத் தெரிந்து கொள்வதாகும்.

தொல்காப்பியர் கூடலிழைத்தல் பற்றி எங்கும் குறிப்பிடவில்லை. ஆனால், கலித்தொகையில் மட்டுமே இக்கூடலிழைத்தல் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. தலைவி சிற்றிலினுள்

தனித்திருக்கும் பொழுது கூடலிழைத்துப் பார்க்கின்றாள். முதலிலே வட்டம் போடுகின்றாள். அது கூடவில்லை. பிறிதொரு முறை முயலுகின்றாள். இவ்வாறு முயற்சி செய்வதைப் பின்வரும் பாடல் கூறுகின்றது.

**கோடுவாய் கூடாப் பிறையை பிறிதொன்று**

**நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே**

**ஆடையான் மூஉய் அகப்படுப்பேன் சூடிய**

**காணான் திரிதருங் கொல்லோ மணிமிடற்று**

**மாண்மலர்க் கொன்றை பலவன்** **(நெ.கலி.25:24-29)**

கூடலிழைத்த தலைவி அது கூடாது, இளம் பிறையாய் நிற்றலைக் கண்டு அது விண்ணிற் சென்று நிறைமதியாய்த் தன்னை வருத்துமென்று நினைந்து துகிலால் மூடுகின்றாள். இவ்வாறு தான் பிறையை அகப்படுத்திக் கொண்டால், சிவன் தலையில் சூடிக் கொள்ளத் தேடுவானோ என்று ஐயுறுகின்றாள். இச்செய்தி கூடலிழைத்துத் தலைவனைக் கூடுவேனா என்று ஆராய்கின்ற தலைவனின் உள்ளத்தைப் புலப்படுத்துகிறது. தலைவனைப் பிரிந்த தலைவி கடலொடு புலந்தும், பள்ளோடும், குருகொடும் புலம்புவது போன்று கூடலிழைத்தும் புலம்புகிறாள். இத்தகைய கூடலிழைத்தல் மிக அரிதாகவே சங்கப் பாடல்களில் உள்ளன.

**அகப்பாடல்களில் அரச வகை**

தொல்காப்பியர் புறத்திணையியலில் வாழ்த்துகளின் இனங்களைச் சுட்டுகிறார். அகப்பாடல்களில் அரச வாழ்த்து இடம்பெறுவது பற்றி அவர் எங்கும் குறிப்பிடவில்லை, ஆனால் தொல்காப்பியர் சுட்டாத இவ்வாழ்த்து மரபானது சங்க இலக்கியங்களில் இரு இடங்களில் இடம்பெற்றுள்ளது. அவற்றுள் ஒன்று கலித்தொகை ஆகும். கலித்தொகையில் அரச வாழ்த்து மரபானது மூன்று பாடல்களில் பயின்று வந்துள்ளது. முதலாவதாக முல்லைக்கலியில் சோழன் நல்லுருத்திரன் அரச வாழ்த்துப் பாடியதாகும். அப்பாடல்,

**குரவை தழீஇயாம் மரபுளி பாடித்**

**தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்**

**மாசில்வான் முந்நீர்ப் பரந்த தொன்னிலம்**

**புணர்ந்த ஆளுங் கிழமையொடு**

**எம்கோ வாழியரிம் மலர்தலை உலகே** **(மு.கலி.3:75-79)**

என்பதாகும். இதேபோல, எம்முடைய பாண்டியன் அகன்ற உலகத்தின் கண்ணே நன்கு வாழட்டும் என்று தெய்வத்தை வேண்டுவோம் என்பது தோழி தலைவியை அழைக்கின்றாள். கெடாத உருமேற்றை மாறுபடுகின்ற மரசினையுடைய பாண்டியனுக்கு இவ்வுலகு உரிமையுடையதாக அவனுடைய ஒரு மொழியைக் கேட்பதாக அமையட்டும் என்று கூறி வாழ்த்துவோம் என்று முல்லைக்கலியில் 4வது பாடல் அரச வாழ்த்துப் பற்றிப் பகிர்கின்றன.

ஏற்றையும், நம் காதலரையும் பாதுகாத்துச் சுரும்பினம் ஒலிக்கின்ற கானத்தை நாம் பாடினமாயத் திருமாலைப் பரவுவேம்; அப்பயனாலேயே எம்முடைய மறம் பொருந்திய பாண்டியன் பகைவர் நிலமென்னும் பெயர் கெட்டுத் தன்னிலம் எனும் பெயர் பெறும்படி அவர் நாட்டைத் திறைகொண்டு பகைவரை வெல்வானாக என்று ஆய்ச்சியர் வாழ்த்துவதாக முல்லைக்கலியின் 6வது பாடல் செப்புகின்றது. முல்லைக்கலி பாடிய சோழன் நல்லுருத்திரன் சோழ மரபினன். இவன் தென்னை வாழ்த்துகின்றார். இங்ஙனம் அகப்பாடல்களில் ஓர் அரசன் மற்றோர் அரசனை வாழ்த்துவது புதிய மரபாகும்.

**அறத்தொடு நிற்றல் — வள்ளைப் பாட்டு**

> **அறம் எனப்படுவது பல பண்புகளையும் தழுவிய பொதுச் சொல்லாயினும் ஈண்டுப் பெண்ணுக்கு உரிய முதற் பண்பான கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடியில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோர்க்கு வெளிப்படுத்தல் அறத்தொடு நிற்றல் என்பதாகும்**[10]

என்று அறத்தொடு நிற்றலுக்கு விளக்கம் தருவர் வ.சுப.மாணிக்கம். அதாவது அறத்தொடு நிற்றல் என்பதற்குக் களவை வெளிப்படுத்துதல் என்று பொருளாகும்.

களவைப் பற்றி தோழி தலைவியிடம் அறத்தோடு நின்ற பிறகே தோழி பிறரிடம் அதற் தோடு நிற்க வேண்டும். தோழி தன் தாயாகியச் செவிலிக்கும், செவிலி தலைவியின் தாயாகிய நற்றாய்க்கும், நற்றாய் தலைவியின் தந்தைக்கும், உடன்பிறந்தோர்க்கும் அவர்கள் குறிப்பால் உணருமாறு தெரிவிப்பாள். தலைவியின் தமர். தலைவன் தலைவிக்குத் திருமணம் செய்து வைப்பர்.

ஆனால், கலித்தொகையில் தோழி மேற்கூறிய முறையில் நில்லாமல் களவைக் கற்பாக்குவதற்குப் புதிய உத்தியைக் கையாளுகிறாள். அதாவது, களவை நீட்டிக்க நினைக்கும் த லைவன் சிறைப்புறமாக இருக்கத் தோழி தலைவியுடன் சேர்ந்து வள்ளைப் பாட்டு பாடுகிறாள். அது கேட்ட தலைவன் மகட்கொடை கேட்பதாகவும், தந்தை மகட்கொடை நேர்ந்ததாகவும் அமைகின்றது அக்கலிப்பாடல்.

**தொகுப்புரை**

பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் தொடர்புடைய மரபானது காலப்போக்கில் மெல்ல மெல்ல மாறும் என்பதற்கேற்ப முதல் நூலாம் தொல்காப்பியம், அதையொற்றிய சங்க இலக்கியம் ஆகியவற்றின் சில விதிமுறைகளிலிருந்தும், மரபிலிருந்தும் மாறி கலித்தொகை அ மைந்துள்ளது. கலித்தொகைப் பண்டையத் தமிழ் மரபுகளைப் பெரும்பான்மையாக ஏற்றாலும், தான் தோன்றிய, வளர்ந்த, வாழ்ந்த காலத்திய மரபு மாற்றங்களின் பதிவுகள் காணப்படுகின்றன. அவற்றுள் கருப்பொருளாகிய விலங்கு, பறவை, மக்கள் ஆகியவற்றைக் குறிக்கும் இளமைப்

பெயர், ஆண்பால் பெயர், பெண்பால் பெயர், இவற்றிற்குரிய பெயர்களின் மாற்றங்களைக் கலித் தொகை நன்கு பதிவு செய்து உள்ளது. மேலும் சங்க இலக்கியங்களில் கூறப்படாத ஏறுதழுவல், மடலேறுதல், வள்ளைப் பாட்டு பாடுதல் போன்ற பல அகப்பொருள் மரபுகள் புதிதாக கலித்தொகையில் மட்டுமே கூறப்பட்டுள்ளது.

கற்றறிந்தோர் ஏத்தும் கலி என்ற சிறப்பைப் பெற்ற இந்நூல் இலக்கண மரபுகளை முழு மையாகக் கொண்டு விளங்குவதுடன் ஆங்காங்கே அம்மரபுகளை மாற்றிப் புதிய முறையில், புதிய வடிவில், புதிய செய்திகளைப் புகுத்தியிருக்கின்றது என்பதை இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

சான்றெண் குறிப்புகள்

1. இளம்பூரணனார் (உ.ஆ.), தொல்.பொருள்., நூ.92.
2. மேலது., நூ.93.
3. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பிய மரபியல்கள், இ.ப.ம.த.ம. ஆய்வுக்கோவை, தொகுதி 2, ப.163.
4. தொ.பொ.மீனாட்சிசுந்தரனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப.75.
5. தொல்.பொருள்.மரபியல், நூ.35, 50.
6. மேலது., நூ.4, 26.
7. மேலது., நூ. 7, 10, 14.
8. தொல்.பொருள்.செய்யுளியல், நூ.181.
9. மேலது., நூ.182.
10. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.79.

பார்வை நூல்கள்

அனந்தராமையர், இ.வை., கலித்தொகை - ஆராய்ச்சிக் குறிப்புரை, நச்சினார்க்கினியர் உரையுடன், நோபில் அச்சுக்கூடம், சென்னை, 1931,

இளவழகனார் (உ.ஆ.), கலித்தொகையும் நச்சினார்க்கினியருரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை, மூன்றாம் பதிப்பு, 1999.

இளம்பூரணனார் (உ.ஆ.), தொல்காப்பியம், பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை, ஏழாம் பதிப்பு, 1977.

சோமசுந்தரனார், பொ.வே., கலித்தொகை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை, 1969.

மாணிக்கம், வ.சுப., சங்கநெறி, மணிவாசகர் நூலகம், திருச்சி, 1987.

மீனாட்சிசுந்தரனார், தெ.பொ., தமிழ் இலக்கிய வரலாறு, காவியா பதிப்பகம், சென்னை, 2012.

விசுவநாதன், அ., கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.

*References*

1. *Ilampoorananar (Ed.), Tol. Porul., Sutra 92.*
2. *Ibid., Sutra 93.*
3. *A. Sivalinganar, Tolkappiya Marabiyalkal, I.P.M.T.M. Research Compendium, Vol. 2, p. 163.*
4. *T.P. Meenakshisundaranar, Tamil Ilakkiya Varalaru, p. 75.*
5. *Tol. Porul. Marabiyal, Sutras 35, 50.*
6. *Ibid., Sutras 4, 26.*
7. *Ibid., Sutras 7, 10, 14.*
8. *Tol. Porul. Seyyuliyal, Sutra 181.*
9. *Ibid., Sutra 182.*
10. *V. Suba. Manickam, Tamizhk kathal, p. 79.*

*Reference Books*

1. Anantharamaiyar, I. Vai., *Kalithogai - Research Commentary (with Naccinarkkiniyar's Commentary)*, Noble Press, Chennai, 1931.
2. Ilavalaganar (Ed.), *Kalithogai and Naccinarkkiniyar's Commentary*, The South India Saiva Siddhanta Works Publishing Society Ltd., Chennai, 3rd Edition, 1999.
3. Ilampoorananar (Ed.), *Tolkappiyam: Porulathikaram*, The South India Saiva Siddhanta Works Publishing Society Ltd., Chennai, 7th Edition, 1977.
4. Somasundaranar, P. V., *Kalithogai*, The South India Saiva Siddhanta Works Publishing Society Ltd., Chennai, 1969.
5. Manickam, V. Suba., *Sanganeri*, Manivasagar Library, Trichy, 1987.
6. Meenakshisundaranar, T. P., *History of Tamil Literature*, Kavya Publications, Chennai, 2012.
7. Viswanathan, A., *Kalithogai: Text and Commentary*, New Century Book House (P) Ltd., Chennai, 2004.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com